# அவினாசிலிங்கம் பல்கலை.யில மாணவர்களுக்கு 'ஸ்கில் மேஜிக்' முகாம்



Dinamani, dt:29.05.2026, pg.no 2

கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற ஸ்கில் மேஜிக் என்ற கோடை முகாமில் சிறப்பாக செயல்பட்டு பரிசு மற்றும் சான்றிதழ் பெற்ற மாணவர்கள்.

**கோவை, மே 28:** கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவனத்தின் தகவல் தொடர்புத் திறன் மையம் சார்பில் 6 முதல் 14 வயது வரையிலான பள்ளி மாணவர்களுக்கான ஸ்கில் மேஜிக் என்ற கோடை முகாம் அண்மையில் நடைபெற்றது.

மாணவர்களின் தகவல் தொடர்பு திறன், தன்னம்பிக்கை, படைப்பாற்றல், குழுப் பணி மற்றும் தலைமைப் பண்புகளை மேம்படுத்தும் விதமாக இந்த அனுபவக் கற்றல் முகாம் 3 நாள்கள் நடத்தப்பட்டது.

விடுமுறை நாள்களில் மாணவர்கள் கைப்பேசிகள் உள்ளிட்ட திரைப் பயன்பாட்டைக் குறைத்து, பயனுள்ள ஆஃப்லைன் செயல்பாடுகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் விதமாக இந்தப் பயிற்சிகள் அமைந்தன.

இந்த முகாமில் கேம்பிரிட்ஜ் மென்பொருள் வாயிலாக ஆங்கில மொழிப் பயிற்சியும், தகவல் தொடர்பு மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

மேலும், நூலகப் பார்வை, வாசிப்பு மற்றும் குறிப்பு எடுக்கும் பயிற்சிகளுடன் நினைவாற்றல் விளையாட்டுகள், வரைந்து தேடுதல் மற்றும் குழுவை ஒருங்கிணைக்கும் பல்வேறு செயல்பாடுகள் மூலம் மாணவர்களின் கவனிப்புத் திறன் மற்றும் ஒருமுகப்படுத்தும் திறன் மேம்பட்டது.

பயிற்சியின் ஒரு பகுதியாக மாணவர்கள் வங்கிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு சலான் நிரப்புதல் மற்றும் வங்கியின் அடிப்படை நடைமுறைகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. அண்மையில் நடைபெற்ற முகாமின் நிறைவு விழாவில், பல்கலைக்கழக துணைவேந்தர் வி.பாரதி ஹரிசங்கர், பதிவாளர் ஹெச்.இந்து, ஒருங்கிணைப்பாளர்கள் எஸ். கிறிஸ்டினா ரெபெக்கா, ஆர்.கருணாம்பிகா ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இதில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன.